**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 17–ம் நாள் செவ்வாய்க்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **குருசாமி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**17.02.2026 OS. 9/2023 வா.சா.1 குருசாமி**

<u>**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>:

1) நான் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் விவசாயம் செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனது தகப்பனார் பழனியாண்டிக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். நான் எனது தகப்பனாரின் 2 வது மனைவி கருப்பாயி ன் மகன் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் முதல் மனைவியின் பிள்ளைகள் பெயர் என்னவென்றால் 1.ராக்கு, 2.பாப்பாத்தி ஆகியோர் ஆவார்கள். 1ம் பிரதிவாதி முத்துவிஜயன் பாப்பாத்தியின் மகன் என்றால் சரிதான். எங்கள் பூர்வீக சொத்துக்களை வாய்க்கரலாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி வாய்க்கரலால் பாகத்தின் படி எனக்கு 1 ஏக்கர் 25 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

2) எனக்கு பாகமாக கிடைத்த சொத்தை வெளிநபருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. ராக்குக்கும், பாப்பாத்திக்கும் மேற்படி பாகப்பிரிவினையில் 79 சென்ட் ஒதுக்கப்பட்டது என்றால் தலா 79 சென்ட் இருவருக்கும் ஒதுக்கப்பட்டது. தாவா சர்வே எண்கள் 65/10, 72/12 சொத்துக்களுக்கு பாப்பாத்தி பெயரில் பட்டா ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டா மாறுதல் சம்பந்தமாக நான் மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு நடவடிக்கையில் யாருக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டது என்றால் எனக்கு ஆதரவாக தீர்ப்பு ஏற்பட்டது.

3) மேற்படி சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவுக்கு எதிராக இந்த நம்பர் 1ம் பிரதிவாதி மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.17 16:42:54 +0530

கிளையில் WP(MD) No. 28428/2022 என்ற வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பில் மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என்றதால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சர்வே எண்கள் 65/10, 72/12 சொத்துக்களை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். நான் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருவதை காட்டக்கூடிய வருவாய் ஆவணங்கள் எதுவும் சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.17 16:43:00 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam